தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1975, மே 2

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 22-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவை விதி 22-ன்கீழ் முதல் ஒரு மணி நேரம் "வினாக்கள்-விடைகள்" என்றுள்ளதை இன்று தளர்த்த வேண்டும்"

என முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

(2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) வறட்சி நிவாரணப் பணிகள் நிறுத்தப்பட்டதும், அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. சோ. அழகர்சாமி அவர்களும்

'serious situation arising out of stoppage of relief work for the past one month resulting in drinking water scarcity, unemployment in villages leading to inability tobuy daily needs for majority of the affected areas'

என்ற பொருள்பற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்ற காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. என். கே. பழனிசாமி அவர்கள்

'the sudden stoppage of drought relief measures in Coimbatore district and consequent dislocation of millions of people and the acute drinking water scarcity prevailing in that district'

என்பது பற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) வறட்சி நிவாரண நிதிக்கு, வசூல் செய்வதில், அருப்புக்கோட்டை போன்ற மிக பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்தும்கூட வருவாய்த் துறை, விற்பனை வரித் துறை அதிகாரிகள் கட்டாய முறையை பின்பற்றுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும்

'serious situation arising out of coercive methods adopted by Revenue and Sales Tax Officials for Government-sponsored drought relief fund even in most affected areas like Aruppukottai Taluk'

என்பதுபற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசுத் தரப்பில் மறுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) குடிதண்ணீர் பற்றாக்குறையும், மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிரம நிலையையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும்.

" தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் குடிதண்ணீர் பற்றாக்குறையால் குறிப்பாகச் சென்னை நகரில் உள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள மிகச் சிரமமான நிலைமை குறித்து விவாதிக்க "

என்று ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற காரணத்தினால் அனுமதி தர மறுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. என். கே. பழனிசாமி அவர்கள்

'the acute drinking water scarcity and as a result of which the untold misery experienced by the people of Madras City'